**கவனிக்க.-** *16.03.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1751 - 2012 මාර්තු මස 23 වැනි සිකුරාදා - 2012.03.23
*1751 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *322* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *323* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மாச்சு மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, சித்திரை மாதம் 23 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, பங்குனி 2.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | கொழும்பு | புதுக்கடை (New Bazaar) பிரிவில் பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், டாம் வீதி, கொழும்பு 12 |
| கொழும்பு | கொழும்பு | ஹல்ஸ்ரொப் (Houltsdrop) பிரிவில் பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், டாம் வீதி, கொழும்பு 12 |
| கொழும்பு | கொழும்பு | மருதானை பிரிவில் பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், டாம் வீதி, கொழும்பு 12 |

3-854

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011 (2012)

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காகத் தகுதிபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. இவ்வறிவித்தலில் 'செயலாளர்' என்ற பதம் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும். "சேவை" என்ற பதம் இலங்கை நிருவாக சேவை எனப்பொருள்படும்.

2. **எழுத்துமூலப் பரீட்சை**.- இப்பரீட்சை பின்வரும் வினாப் பத்திரங்களை கொண்டமைந்திருக்கும் :-

(i) பொது விவேகம் ;
(ii) கட்டுரையும் சுருக்கமும் ;
(iii) பொது அறிவு ;
(iv) முகாமைத்துவ உளச்சார்பு.

*பரீட்சைத் திகதி*.- இப்பரீட்சை 2012, யூன் மாதம் கொழும்பு நகரில் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்திவைக்கவோ இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனை களுக்கமைய செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

*வாய்மொழிப் பரீட்சை*.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கிடையில் போதுமானதென அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப் படும் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்ப தாரிகள் தொடர்பில் அமைவு முறையில் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும். திகதியை செயலாளர் தீர்மானிப்பார்.

3. நியமனம் செய்யப்படுவோரின் எண்ணிக்கையும், நியமனம் நடைமுறைப்படும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின்/ அமைச்சரவையின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்**.- அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும்,2005, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதிய சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதும், வருங்காலங்களில் மேற்கொள் ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் அமைய தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ஒருவர் இச்சேவையில் வகுப்பு III இற்கு நியமனம் செய்யப்படுவர்.

4.1 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமையை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கின்ற அல்லது நழுவுகின்ற பரீட்சார்த்திகளின் நியமனங்களை இரத்துச் செய்ய இடமுண்டு.

5. **அமைவும் மாதாந்த வேதன அளவுத்திட்டமும்**:

| | | |
|---|---|---|
| விசேட தரம் | : ரூபா 42,390 - 12 × 1,310 | - ரூபா 58,110 |
| வகுப்பு I | : ரூபா 36,755 - 17 × 1,050 | - ரூபா 53,555 |
| வகுப்பு II | : ரூபா 30,175 - 8 × 790 | - ரூபா 35,705 |
| வகுப்பு III | : ரூபா 22,935 - 10 × 645 | - ரூபா 29,385 |

(நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலப்பகுதிக்குள் I ஆவது வினைத்திறன்காண் தடையும், நியமனத் திகதியிலிருந்து 06 வருட காலப்பகுதிக்குள் II ஆவது வினைத்திறன்காண் தடையும் சித்தியடைய வேண்டுமென்பதுடன் நியமனம் கிடைக்கப்பெற்று 5 ஆண்டுகள் முடிவுறுவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 07/ 2007 இன் பிரகாரம் இரண்டாவது அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.)

இப்பரீட்சை மூலம் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புகள் செய்யப்படுகின்றது.

6. **உடல் நிலைமையும் ஒழுக்கமும்**.- பரீட்சார்த்தி நல் உடல் நிலையுடையவர் என்றும், நல்லொழுக்கமுடையவரென்றும் செயலாளர் திருப்தியடைதல் வேண்டும். அவர் நல்ல கண்பார்வை உடையவராகவும் இருக்கவேண்டுமென்பதுடன் இத்தீவில் எப்பகுதியிலேனும் சேவை யாற்றத்தக்க உடல்நிலை உடையவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவப் பரிசோதனை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும்.

7. **தகைமைகள்**.- இதற்காக தோற்றுகின்ற பரீட்சார்த்தியொருவர் :-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.-

(அ) பல்கலைக்கழக பட்டம் வலுப்பெறும் திகதி 2011.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியாக இருத்தல் வேண்டும்.

(iii) 2011.12.31 ஆந் திகதியில் 28 வயதைப் பூர்த்தி செய்யாதவராக இருத்தல் வேண்டும்.

(iv) நல்லொழுக்கத்துடனும் சிறந்த தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(v) ஏதேனுமொரு சமயக் கிளையில் மதகுரு அந்தஸ்தில் உள்ள எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

**குறிப்பு** :

(i) இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் இப்போட்டிப் பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேலாக தோற்றுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) இப்பரீட்சைக்காக விண்ணப்பம் செய்வதற்கு தேவைப் படும் தகைமைகள் 2011.12.31 ஆந் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

*8.* **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் எந்தவொரு மாவட்ட செயலகத்திற்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைப்பதற்காக செலுத்த வேண்டும். மாவட்ட செயலகத்திலிருந்து/ பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

*9.* **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைய வேண்டுமென்பதுடன் அது 8 1/2" x 12" (A4) அளவுள்ள ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். 1.0 தொடக்கம் 2.12 வரையிலான கூடுகள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 3.0 தொடக்கம் 7.0 வரையிலான கூடுகள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமைபெறாதவாறு தகவல்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தில் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்ப தாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறாரோ அம்மொழி மூலத்தில் விண்ணப்பம் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம், (ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை) பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரியிடப்பட்டு 2012.04.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011 (2012)" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழி விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படல் அத்தியாவசியமாகும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,40,360 இற்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் நிறைவுபெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது. இலங்கை பரீட்சை திணைக்களம் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகளை அனுப்பியதும், அது தொடர்பாக பத்திரிகைகளில் அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகளும் பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டும் கொழும்புக்கு வெளியிடமாயின் அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதத்தையும் உடன்வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

*10.* **பரீட்சைக்கு அனுமதி.**- (அ) விண்ணப்பங்களை அனுப்பிய யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய தனது அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் முன்கூட்டியே தனது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்த வேண்டியதுடன் பரீட்சைக்காக அவர் சமுகமளிக்கும் முதல் நாளிலேயே அந்த அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளின் தொகுதியொன்று இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணை யாளரால் விதிக்கப்படும் விதி ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். இந்த விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவதற்கு நேரிடும்.

**குறிப்பு.**- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாககொள்ளவியலாது.

*11.* **பரீட்சார்த்தியின் அடையாளம்.**- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வை யாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

*12.* **பொய்யான தகவல்கள் வழங்குதலுக்கான தண்டனை.**- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டியஅளவில் பொய்யானவை யெனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனுமொரு முக்கியமான

விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் அரச சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

*13.* இவ்வொழுங்கு விதிகளால் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்துரைகளுக்கு அமைவாக செயலாளர் தீர்மானிக்கின்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

*14.* **பரீட்சை முறையும் பரீட்சை மொழியும்** :

(அ) பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தை எம்மொழி மூலம் எழுதிச் சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரச கருமமொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) பரீட்சார்த்தியொருவர் தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தில் பாடங்களை இரண்டு மொழிகளிலோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளின் மூலமாகவோ சித்தியடைந்திருப்பின், அந்தப் பல்கலைக்கழக பட்டத்தில் அவர் சித்தியடைந்த பாடங்களில் கூடிய தொகைக்கு விடையெழுதிய மொழி மூலமாகவோ அல்லது அரச கரும மொழியொன்றின் மூலமாகவோ பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப் பாடத்தை இன்னுமொரு மொழியிலும் எழுதிச் சித்தியடைந்திருக்கும் சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர், அவர் பிரதான பாடத்திற்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கருமமொழியொன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**குறிப்பு** :

(i) மேற்போந்த (ஆ), (இ) என்பவற்றில் பிரயோகிக்கப்பட்ட ''தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டம்'' எனும் சொற்றொடர் 7 (ii) ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டங்களின் தகைமையைக் குறிக்கும்.

(ii) பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் மட்டும் விடை எழுத வேண்டும்.

(iii) பரீட்சார்த்தியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

*15.* **தெரிவுசெய்யும் முறை** :

(அ) பின்வரும் பாடங்களைக் கொண்ட ஒரு எழுத்துப் பரீட்சை :

(i) பொது நிர்வாகம் (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

(ii) கட்டுரையும் சுருக்கமும் (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(iii) பொது அறிவு (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(iv) முகாமைத்துவ உளச்சார்பு (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(ஆ) வாய்மொழித் தேர்வு - 25 புள்ளிகள்
எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களுள் தகைமை பெற்றவர்கள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குப் போதுமானதென விதித்துரைக்கப் படுகின்ற உயர்மட்ட மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்களுமான பரீட்சார்த்திகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகள் போதிய அளவு இருப்பார்களாயின் வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரு மடங்கான பரீட்சார்த்திகள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். (புள்ளி வழங்கும் முறை நியமன அதிகாரியால்/ அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படும்.)

*16.* எழுத்துப் பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளை திறமை ஒழுங்கின்படி நியமனம் செய்வதற்கு தெரிவுசெய்யப்படும். (நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதலானது நியமனம் வழங்குவதற்கான தகைமையாக கருதுதல் ஆகாது.)

*17.* **பாடத்திட்டம்**.- (i) பொது விவேகம் (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் சோதிப்பதன் மூலம் அவற்றை கிரகிப்பதில் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக் கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படும். (இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

(ii) கட்டுரையும் சுருக்கமும் (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

தரப்பட்ட தலைப்புக்கள்/தொனிப்பொருட்கள் பலவற்றில் இருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவுசெய்துகொள்ளும் தலையங்கங்கள்/ தொனிப்பொருள்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் சமர்ப்பித்தல், ஒன்றுதிரட்டல் மற்றும் பரப்புதல் என்பவற்றில் பரீட்சார்த்திக்கு உள்ள தர்க்க ரீதியான சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் ஒன்றை அல்லது நிருபமொன்றை ஊகித்துணர்ந்து அதன் முக்கிய கருத்துக்களை தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் கருத்துக்களை தெரிவிப்பதில் அவருக்கு உள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. (எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

(iii) பொது அறிவு (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

தேசிய ரீதியிலும் வலய ரீதியிலும் உலகில் பல அமைப்புச் சுற்றாடல்களினுள் போன்று எமது சமூகத்தில் நிலவுகின்ற சமூக, கலாசார, கல்வி, விஞ்ஞான, அரசியல், பொருளாதார மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பில் பரீட்சார்த்தி அடைந்துள்ள அறிவையும் புரிந்துணர்வையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. (இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய

விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

(iv) முகாமைத்துவ உளச்சார்பு (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

பிரச்சினைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் இனம்காணுதல், தீர்மானமெடுத்தல், நபர்களுக்கிடையிலான தொடர்புகளை நடாத்திச்செல்லுதல், தொடர்புத் துறைகளிலான திறமை, சுய ஒழுக்கம், கொள்கை மற்றும் உபாய வழிமுறைகளை தயாரித்தல் ஆகிய வகையில் பரீட்சார்த்தி ஒருவரிடம் உள்ள சிறந்த முகாமைத்துவ திறமைகளை அவரிடம் முன்வைக்கப்படும் சம்பவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. (இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2012, மாச்சு 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011/(2012)**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO CLASS III OF THE SRI LANKA ADMINISTRATIVE SERVICE - 2011(2012)

1.0 மொழி மூலம் :
பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

2.0 தனிப்பட்ட தகவல்கள் .-

2.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
உதாரணம் : SILVA, A. B.

2.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சலிடப்படும்) :-----.

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.6 பால் : (ஆண் - 0, பெண் - 1)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.7 திருமணமானவரா? திருமணமாகாதவரா?
(திருமணமாகாதவர் -1, திருமணமானவர் - 2) :-
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.8 இனத்தொகுதி (சிங்களம் -1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5) :-
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.9 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2.10 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

2.11 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

2.12 தொலைபேசி இலக்கம் :

3.0 இலங்கை நிருவாக சேவைக்கு நியமனம் செய்வதற்காக இதற்கு முன் நடாத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டுகளைக் குறிப்பிடவும் :

| | | தோற்றியுள்ளேன்/ தோற்றவில்லை |
|---|---|---|
| 2005, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப் பட்ட இலங்கை நிருவாக சேவை பிரமாணக் குறிப் பின்படி (தற்போது வலுவிலிருக்கும்) 2005.01.01 ஆந் திகதிக்கு முன் பரீட்சைக்குத் தோற்றிய வருடம் | 2007 திறந்த | ---------------- |
| | 2007 மட்டுப் படுத்தப்பட்ட | ---------------- |
| | 2009 திறந்த | ---------------- |
| | 2009 மட்டுப் படுத்தப்பட்ட | ---------------- |
| | 2010 திறந்த | ---------------- |

4.0

(i) பல்கலைக்கழக பட்டம் பெற்ற திகதி :----. (இத்தகைமைகள் உள்ளனவா என்பதைப் பார்ப்பதற்காகத் தயவுசெய்து அறிவித்தலின் 7 (ii) ஐ நன்றாக வாசிக்கவும்.)

(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.

(iii) பதிவு இலக்கம் :----.

(iv) வெளிவாரி/உள்வாரி :----.

(v) பட்டம் :----.

(vi) பாடங்கள் :----.

(vii) வகுப்பு :----.

(viii) மேல்தரம்/குறைந்த தரம் :----.

(ix) சுட்டெண் :----.

(x) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

5.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இதில் நன்கு ஒட்டிவிடுக :

| |
|---|
| (பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.)<br>(பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியொன்றை<br>தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) |

6.0 **பரீட்சார்த்தியின் உறுதியுரை**.- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக் கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ....................................... ஆம் இலக்க ................................. ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட் டுள்ளதென்றும் உறுதியுரைக்கின்றேன். மேலும் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பேன் எனவும், இப்பரீட்சை ஒழுங்குவிதிகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப் பட்டால் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தி தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதி, ஒழுங்குகளுக்கு நான் கீழ்ப்படிவேன் எனவும் வெளிப் படுத்துகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் 9(ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்) :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற .................... (முழுப்பெயர்) என்பவர் எனக்கு நன்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும் குறித்த பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் ......................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற
உத்தியோகத்தரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.
(அலுவலக முத்திரை மூலம் அத்தாட்சிப்படுத்தவும்).

3-912

## சமூக சேவைகள் அமைச்சு

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

**சமூகப்பணி இளமாணிப்பட்டக் கற்கைநெறி,
சமூகப்பணிக் கல்லூரி - கல்வியாண்டு 2012**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது, சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்குகின்றதும், சமூகப்பணி இளமாணிப் பட்டக் கற்கை நெறியை வழங்குகின்றதுமான ஓர் நிறுவனம் ஆகும். இக்கற்கை நெறியானது ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுகின்றது.

இந்நிறுவனமானது 1978 ஆம் ஆண்டின் 25ஏ, 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் பட்டச் சான்றிதழ் வழங்கும் ஒரு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(அ) இக்கற்கைநெறிக்கு, 2011 ஆம் ஆண்டின் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் Z வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடைய, சமூகப்பணி இளமாணிக் கற்கைநெறியை தொடர விரும்புகின்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அல்லது

(ஆ) சமூகப்பணி டிப்ளோமா சான்றிதழைப் பெற்ற மாணவர் களிடம் இருந்து சமூகப்பணி இளமானிக் கற்கையின் இரண்டாம் வருட (2011/2015) அனுமதிக்காக ஆர்வமுள் ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஏன் நீங்கள் இக்கற்கை நெறியை தெரிவு செய்ய வேண்டும்?

சமூகப்பணித் தொழில்வாண்மையாளர்களுக்கு உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும், பாரிய கேள்வி காணப்படுவதுடன் அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் துறைகளில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் தொழில் வாய்ப்புக்கள் பல காணப்படுவதுமாகும்.

ஏன் நீங்கள் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை தெரிவு செய்ய வேண்டும் ?

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது 1992 ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அரச உயர் கல்வி நிறுவனமாக அனுமதிக்கப்பட்டதாகும். சமூகப்பணித் தொழில்வாண்மை கல்விக்காக இலங்கையில் நிறுவப்பட் டுள்ள ஒரேயொரு அனுமதிக்கப்பட்ட நிறுவனமும் இதுவேயாகும்.

**இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் முறை**.- கீழே குறிப்பிட்ட மாதிரியினடிப்படையில் ஆங்கில மொழியில் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பமானது, 2012.04.23 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் மேல்பக்க இடது மூலையில் BSW – 2012 எனக் குறிப்பிடவும்.-

பதிவாளர்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
488ஏ, நாவல வீதி, ராஜகிரிய.

மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தோடு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் என்ற பெயருக்கு ரூபா 500 பெறுமதியான காசுக்கட்டளையை இணைத்து ரூபா 5 பெறுமதியான முத்திரையொட்டிய, தங்களின் விலாசம் எழுதப்பட்ட கடித உறையையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2882506-11, 011-3119597 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

www.nisd.lk

(அ) மற்றும் (ஆ) என்ற இரு பிரிவுகளுக்கும் விண்ணப்பிப்பதற்கு பின்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தினையே உபயோகித்தல் வேண்டும்.)

National Institute of Social Development
Application for the Bachelor of
Social Work Degree Programme - 2012

1. Full Name : ……………………………………
2. Name with Initials : ……………….................
   (In capital letters)
3. National Identity Card Number :…………….
4. Permanent Address : …………………………
   ……………………………………………….
5. Contact Tel. No. : ……………………………
6. Sex :……………………………………………
7. Date of Birth : …………………………………
8. Nationality : …………………………………
9. Educational Qualifications :
   (i) G. C. E. (O/L)
   Index No.:………………Year :…..……
   Results : ………………………
   (ii) (A) G. C. E. (A/L 2011)
   Index No.:………………Z Score :…..…
   Results : ……………………….
   District : ……………………….
   (B) (to be filled by the Diploma holders/ Applicants for the second year only)

   Academic year ............................
   Effective date of Diploma in Social Work
   .................................................................
   (iii) Highest Qualifications / Examination in English (If any) :
   ………………………..……
   (iv) Other Qualifications ……………….................…....…...

Copies of the result sheets of the GCE (O/L) and GCE (A/L) examinations should be forwarded along with the application.

I certify that the information furnished by me is true and accurate. I am aware that my student-ship can be cancelled, even after the selections, if the particulars are found to be incorrect.

………………......………,
Signature.

Date : ……………….

பதிவாளர்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
2012.03.11.

3-899

## இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை - 2012

இந்த அறிவித்தலில் "சேவையின்" எனும் பதம் இலங்கை கணக்காளர் சேவையைக் குறிக்கும்.

*1.* ***பரீட்சைத் திகதி***.- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2012 யூலை மாதத்தில் கொழும்பில் பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

*2.* ***நியமிப்போரின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி***.- இது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

*3.* ***சேவை நிபந்தனைகள்***.- அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலக்கம் 1670/33 மற்றும் 2010, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அதில் செய்யப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் செய்யக் கூடிய திருத்தங்களுக்கும் இணங்கும் வகையில் தெரிவு செய்யப்படுகின்ற அபேட்சகர் ஒருவர் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

*4.* ***கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்***.- 2006.04.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் எஸ்.எல் 1-2006 சம்பளத் தொகுதியின் பிரகாரம்,

*மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம்*.- SL1 - 2006 - ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூ. 53,555.

*5.* ***தகைமைகள் :***

*5.1 திறந்த போட்டிப் பரீட்சை :*

(அ) கல்வித் தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலே வர்த்தகம், முகாமைத்துவம், கணக்கியல், பொருளியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்;

அல்லது

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின்/ இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமாதாரர் ஒருவராகவிருத்தல்;

அல்லது

(iii) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் அல்லது வேறொரு பொதுநலவாய நாட்டைச் சேர்ந்த இறுதி அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது அதிலும் கூடிய உயர்நிலைப் பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(iv) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டைச் சேர்ந்த பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஒன்றில் நடாத்தப்படும் செலவினம் மற்றும் முகாமைத்துவப் பரீட்சையின் I மற்றும் II ஆம் பகுதிகள் அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது அதிலும் கூடிய உயர்நிலைப் பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(v) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் நிறுவகத்தில் I ஆவது தொழில்சார் மட்டத்தில் அல்லது அதிலும் கூடிய உயர் மட்டத்திலான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(vi) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் பட்டயச் சங்கத்தின் I ஆவது II ஆவது பகுதிக்குரிய பரீட்சை அல்லது அதிலும் கூடிய பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அல்லது

(vii) ஐக்கிய இராச்சியத்தின் செயலாளர்களின் மற்றும் நிருவாகிகளின் பட்டய நிறுவனத்தின் இறுதிப் பரீட்சை

(ஆ) உடல்சார் தகைமைகள்.- சகல அபேட்சகர்களும் இலங்கையின் எந்தவொரு இடத்திலும் பணியாற்றுவதற்கு அனைத்து வழிகளிலும் உடல்சார் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) ஏனைய தகைமைகள் :

(i) இலங்கைப் பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும்

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்

(iii) திறந்த போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் எந்தவொரு நபருக்கும் தோற்றுவதற்கு அனுமதி கிடையாது.

(iv) யாதேனுமொரு சமயத் தலைவராக செயற்படும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற மாட்டார்.

(v) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக கருதுவதற்கு விண்ணப்பதாரர், 5.1(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2012.03.23 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும், தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) வயது.- 2012.03.23 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று) 22 வயதிற்குக் குறையாதவராகவும், 28 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5.2 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை :

(அ) அனுபவத்திற்கான தகைமைகள் :

(i) மேற்படி 5.1(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு தகைமையுடன் 2012.03.23 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப் படும் தினத்தன்று) அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான, தொடர்ச்சியான, நிரந்தர சேவைக் காலம் ஒன்றுடன் குறித்த தினத்தன்று ஆகக் குறைந்தது 05 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய MN1-2006(ஏ) சம்பள அளவுத் திட்டத்தில் அல்லது அதிலும் கூடிய சம்பள அளவுத் திட்டத்திற்குரிய பதவி ஒன்றில் 10 வருடங்களிற்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் 10 சம்பள ஏற்றங்களை ஆகக்குறைந்தது பெற்றிருத்தல்.

(ஆ) உடல் தகைமைகள்.- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு தேவையான உடல் நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) ஏனைய தகைமைகள் :

(i) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்

(ii) விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுவதற்கு முந்திய ஐந்து வருட காலப் பகுதியினுள் உரிய தினத்தில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) 2012.03.02 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று) முந்திய ஐந்து வருட காலத்தினுள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைக் கொண்டிருத்தல்.

(iv) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

(v) யாதேனுமொரு சமயத் தலைவராக செயற்படும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற மாட்டார்.

(vi) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவராகக் கவனத்திற் கொள்வதற்கு குறித்த விண்ணப்பதாரர், 5.2(அ) பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளை 2012.03.23 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும், தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- திறந்த போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூ. 300 ஆகும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூ. 300 ஆகும். விண்ணப்பதாரர் ஒருவர் இரண்டு பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் கட்டணமாக ரூ. 500 அறவிடப்படும். இக்கட்டணத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்புச் செய்வதற்காக பிரதேசச் செயலகத்திற்கு செலுத்துதல் வேண்டும். பிரதேசச் செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் உரிய பெட்டியில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை விண்ணப்ப தாரர்கள் தம்மிடம் வைத்துக்கொள்ளல் பயன்மிக்கதாக அமையும். இப்பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பத்தை இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ-4 அளவிலான கடதாசி ஒன்றில் தயாரித்து விண்ணப்பதாரரினாலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப் படிவத்தின் இலக்கம் 01 முதல் இலக்கம் 04 வரையில் முதற் பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழியிலேயே நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் விண்ணப்பத்தினை தயாரிக்கும் போது அதன் தலைப்புக்களை ஆங்கில மொழியில் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) குறிப்பிடுதல் கட்டாயமானதாகும். (12 ஆவது பந்தியைப் பார்க்கவும்)

(இ) திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபாலில் 2012.04.23 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளரிற்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "திறந்த போட்டிப் பரீட்சை, கணக்காளர்" என்று தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு**.- அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும், திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தை திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(ஈ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களினூடாக பதிவுத் தபாலில் 2012.04.23 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளரிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, கணக்காளர்" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எதுவித விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சை ஆகிய இரண்டிற்கும் தோற்றும் பட்சத்தில் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை, கணக்காளர்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

(உ) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப் பட்டவுடனேயே பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப் படும். பரீட்சை இடம்பெறும் தினத்திற்கு ஏழு (07) நாட்களுக்கு முன்னராவது பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர் ஒருவர் பின்வரும் விபரங்களுடன் உடனடியாக பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். (தந்திகள் இலங்கை "பரீட்சைகள்" பெலவத்தை)

(I) பரீட்சையின் பெயர்:
(II) விண்ணப்பதாரரின் முழுப் பெயர்:
(III) முகவரி:
(IV) விண்ணப்பத்தை தபால் செய்த திகதி, பதிவு இலக்கம் மற்றும் தபால் அலுவலகம்:

8. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, உரியவாறு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் உரிய முறையில் கையொப்பத்தை உறுதி செய்து தமது அனுமதி அட்டையை பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி பெற்றுக்கொடுக் கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டை முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் நாளன்று அதற்குப் பொறுப்பான அதிகாரியிடம் வழங்குதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்றினை அனுப்பியுள்ளமை, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்று பொருள்கொள்ளக் கூடாது.

(ஈ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அவ்வாறான சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு அவர் ஆளாக வேண்டி ஏற்படும்.

9. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான தலைமை அதிகாரி திருப்தியடையும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் யாதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை ;

(ஆ) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான கடவுச் சீட்டு.

விண்ணப்பதாரரின் அலுவலக அடையாள அட்டை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

10. **போலியான தகவல்களை வழங்குதல்**.- விண்ணப்பதாரர் ஒருவர் தகைமை பெறாதவர் என்று கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப் பகுதியில் அல்லது அதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் வழங்கியுள்ள யாதேனுமொரு விடயம், அவர் போலியானதென தெரிந்து கொண்டே வழங்கியுள்ளமை கண்டுபிடிக்கப்படின், அல்லது யாதேனுமொரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு.

11. இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சை முறை**.- பரீட்சை மொழிமூலம்.- (அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தாம் விரும்பிய ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு**.- (i) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரம் தோற்றுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவருக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

13. **பரீட்சித்தல் முறை**.- (அ) பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சை ஒன்று.- இவ்வினாத்தாள்கள் அனைத்தும் கட்டாய வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டியது கட்டாயமானதாகும் :-

| | | |
|---|---|---|
| (i) | நிதி கணக்கியல் - வினாத்தாள் I<br>(காலம் : 03 மணித்தியாலம்) | - 100 புள்ளிகள் |
| (ii) | நிதி கணக்கியல் - வினாத்தாள் II<br>(காலம் : 03 மணித்தியாலம்) | - 100 புள்ளிகள் |
| (iii) | செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல்<br>(காலம் : 03 மணித்தியாலம்) | - 100 புள்ளிகள் |
| (iv) | அரச நிதி முகாமைத்துவம்<br>(காலம் : 03 மணித்தியாலம்) | - 100 புள்ளிகள் |
| (v) | கணக்காய்வு மற்றும் விசாரணை<br>(காலம் : 03 மணித்தியாலம்) | - 100 புள்ளிகள் |
| (vi) | பொது விவேகம் மற்றும் கிரகித்தல்<br>(காலம் : 03 மணித்தியாலம்) | - 100 புள்ளிகள் |

பாடத்திட்டம் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) நேர்முகப் பரீட்சை.- எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக் குறைந்தது 40% வீதப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள அபேட்சகர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய அபேட்சகர்களின் எண்ணிக்கையானது தேவைக்கேற்ப எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலை ஒவ்வொரு மொழியிலும் வெளியிடும்போது யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

15. **நியமனம் செய்வதற்கு தெரிவுசெய்யும் முறை**.- திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் உச்ச புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள திறமையின் ஒழுங்கு முறைப்படி மற்றும் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர். ஒன்றுக்கு மேற்பட்ட அபேட்சகர்கள் சம அளவான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் தெரிவு செய்வதற்கான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் காணப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பீ. ஏ. அபேசேகர,
திறைசேரியின் பிரதிச் செயலாளர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01.
2012, மார்ச் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/ திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

**OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF THE SRI LANKA ACCOUNTANTS' SERVICE - 2012**

| | |
|---|---|
| பரீட்சை இலக்கம் :<br>(அலுவலக பயன்பாட்டிற்காக) | |
| பரீட்சைக்குத் தோற்றும் நகரம் | நகர இலக்கம் |
| | |
| விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் நகர இலக்கம் என்பவற்றினைக் குறிப்பிடவும்.<br>(கொழும்பு - 1, யாழ்ப்பாணம் - 2)<br>* நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :<br>சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4<br>(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்)<br>* பரீட்சை மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | ☐ |

1. பெயர்:
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : Mr./Mrs./Miss ..............................
   (உ+ம்) Mr./Mrs./Miss. SILVA, A.B

   1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..........................................................

   1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :.................
   ..........................................................

   1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..............
   ..........................................................

   2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :....................
   ..........................................................

   2.2 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..........................................................

   2.3 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :...............
   ..........................................................

   2.4 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ....................................
   ..........................................................
   (அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் அவரது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில், அதுபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்)

3.
   3.1 பால்: பெண் - 1, ஆண் - 2 ☐
   (உரிய இலக்கத்தை எழுதவும் )

   3.2 விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :
   விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2 ☐
   (உரிய இலக்கத்தை எழுதவும்)

   3.3 பிறந்த திகதி :
   ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

   3.4 2012.03.23 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4.
   4.1 நீங்கள் விண்ணப்பிப்பது திறந்த போட்டிப் பரீட்சைக்கா/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கா அல்லது இரண்டிற்குமா என்பது பற்றி-
   மட்டுப்படுத்தப்பட்ட - 1, திறந்த - 2,
   இரண்டிற்கும் - 3 ☐
   (உரிய இலக்கத்தை பெட்டியினுள் இடவும்)

   4.2 செலுத்திய பரீட்சைக் கட்டணம் ரூபா :......................

5. (திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களினால் நிரப்புவதற்காக) பின்வரும் விபரங்களை வழங்கவும் :

   5.1 அறிவித்தலின் 5.1 பந்தியின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவதற்காக பெற்றுள்ள தகைமைகள் :...............................................
   ..........................................................

   5.2 அத்தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் :
   ..........................................................

6. (மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களினால் நிரப்புவதற்காக) பின்வரும் விபரங்களை வழங்கவும்) :

   6.1 அறிவித்தலின் 5.2 பந்தியின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவதற்காக பெற்றுள்ள தகைமைகள் :...............................................
   ..........................................................

*6.2* அத்தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் :

(அ)

| பணியாற்றியுள்ள திணைக் களங்கள் | பதவி | முதல் | வரை | கால எல்லை |
|---|---|---|---|---|
| | | | | |

(ஆ)

(i) சேவை/பதவி :......................................

(ii) வகுப்பு :.................................. ஆந் திகதி முதல்

(iii) வகுப்பு :........................................ ஆந் திகதி முதல்

(iv) 2012.03.23 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று) அரசாங்கத்தின் கீழ் மொத்த சேவைக் காலம் :
வருடங்கள் :............... மாதங்கள் :...............
நாட்கள்:.............

(அ) மேற்படி (ii) இல் சேவை :
வருடங்கள் :............ மாதங்கள் :..........

(ஆ) மேற்படி (iii) இல் சேவை :
வருடங்கள் :............ மாதங்கள் :..........

(v) 2012.03.23 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று) வருடாந்தச் சம்பளம் :..............................

7.

*7.1* இலங்கைக் கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு நீங்கள் தோற்றிய ஆண்டு :

1 .............................. 4 ..............................
2 .............................. 5 ..............................
3 .............................. 6 ..............................

*7.2* இலங்கைக் கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு நீங்கள் தோற்றிய ஆண்டு :

1 ..............................
2 ..............................
3 ..............................

*8.* பணம் செலுத்திய பற்றுச் சீட்டை கழறாதவாறு விண்ணப்பத்தில் ஒட்டவும்

| பற்றுச் சீட்டை ஒட்டுவதற்காக |
|---|

(i) இலக்கம் :....................................................
(ii) திகதி :....................................................
(iii) பணம் செலுத்திய இடம் :....................................
(iv) செலுத்திய தொகை : ரூபா ..................................

*9.* **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

*9.1* இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையிலும் மற்றும் எனது நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலக்கம் .......................... மற்றும் ...................... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும், குறிப்பிட விரும்புகிறேன். மேலும், பரீட்சை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும், இப்பரீட்சைக்குரிய நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவரென அடையாளம் காணப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது அது நடைபெறும் வேளையில் அல்லது அதன் பின்னர் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனும் தீர்மானத்திற்கு நான் உடன்படுவதாகவும், பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு நான் உடன்படுவதாகவும் உறுதியளிக்க விரும்புகிறேன்.

*9.2* 2012.03.23 ஆந் திகதிக்கு (அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று) முந்திய ஐந்து வருடக் காலப் பகுதியினுள் (சேவை அல்லது திணைக்கள நிபந்தனைகளில் ஒன்றான சம்பள ஏற்றம் தவிர்ந்த) சகல சம்பள ஏற்றங்களும் என்னால் உழைக்கப்பட்டுள்ளது எனவும், (எச்சரிக்கை விடல் தவிர்ந்த) எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கும் நான் ஆளாகி இல்லை எனவும் உறுதியுரைக்கிறேன்.

..................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :........................

*10.*

*10.1* **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**
*(மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களும் மற்றும் உரியதாயின் மாத்திரம் திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களும் பூர்த்திசெய்தல் வேண்டும்.) தமது அந்தரங்க கோப்புக்களை பேணிவரும் அலுவலகத் தலைவரே திணைக்களத் தலைவராக கையொப்பமிடுதல் வேண்டும்.)*

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ........................ எனும் பெயருடைய விண்ணப்பதாரர் ............... ஆந் திகதி முதல் இந்த அலுவலகத்தில் பணியாற்றுவதாகவும், அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகர மானவை எனவும், மேற்படி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள

அனைத்தும் இந்த அலுவலகத்திலுள்ள ஆவணங்களில் இருந்து நான் தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பெற்றுக் கொண்டவை எனவும், 2012 ............................ மாதம் .................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கைச்சாத்திட்டதாகவும் இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

...................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :.............................
பதவி :.............................................................
முகவரி : (இறப்பர் முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)
திகதி.............................

10.2 கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :
(திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களினால் தேவையாயின் மாத்திரம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.)
இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ......................... எனும் பெயருடைய விண்ணப்பதாரரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் என் முன்னிலையில் இங்கு கைச்சாத்திட்டதாகவும், உறுதிப்படுத்துகிறேன்.

.............................................,
(உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்).

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :.............................
பதவி :.............................................................
முகவரி : (இறப்பர் முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)
திகதி :.................................................................

**குறிப்பு** : உறுதிப்படுத்துபவர் சமாதான நீதவான் ஒருவராக, சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவராக, சட்டத்தரணி ஒருவராக, நொத்தாரிசு ஒருவராக அல்லது வருடாந்தம் ரூ.230,700/= இற்குக் குறையாத திரண்ட சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

*பின்னிணைப்பு - 1*

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிப்பதற்காக நடாத்தப்படும் திறந்த/வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைகள் தொடர்பான பாடத்திட்டம் பற்றிய விபரம்** :

பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

பகுதி 'அ'

| இல. | விடயங்கள் | ஆகக் கூடிய புள்ளிகள் | சித்திப் புள்ளி | காலம் |
|---|---|---|---|---|
| 01 | நிதிக் கணக்கியல் I | 100 | 40 | காலம் 03 |
| 02 | நிதிக் கணக்கியல் II | 100 | 40 | |
| 03 | செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் | 100 | 40 | |
| 04 | அரச நிதி முகாமைத்துவம் | 100 | 40 | |
| 05 | கணக்காய்வு மற்றும் விசாரணை | 100 | 40 | |
| 06 | பொது விவேகம் மற்றும் கிரகித்தல் | 100 | 40 | |

***பாடத் திட்டம்***.- பாட இலக்கம் 01 மற்றும் 02 நிதிக் கணக்கியல் I மற்றும் II :

நிதி கணக்கீட்டின் தன்மை மற்றும் கணக்குகளைப் பயன்படுத்துவோரும் அவர்களுக்குத் தேவைப்படும் தகவல்களும்

கணக்கீட்டு முறைமை

கணக்கீட்டுச் சமன்பாடுகள், இரட்டைக் கணக்குப் பதிவு முறையும் கணக்கீட்டு முறைமைகளும், ஆரம்பப் பதிவேடுகளும் பேரேடுகளும், மீதியினைப் பரீட்சித்தல், திரண்ட முற்பணக் கொடுப்பனவுகள், சீராக்கங்கள், மூலதன செலவினம், வருமானச் செலவு, பெறுமானத் தேய்வு, தொங்கல் கணக்குகள், கணக்கிணக்கக் கூற்றுகள், பூரணப்படுத்தப்படாத அறிக்கைகள்.

இறுதிக் கணக்குகள்.- உற்பத்திக் கணக்கு, வியாபார இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகை, நிதிப் பாய்ச்சல் கூற்றும் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு.

பங்குடமை கணக்கீடு.- பங்குடமை உடன்படிக்கைகள், பங்குடமையில் கணக்கு பதிவுகள், நிலையான மூலதனக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள், கடன் கணக்குகள், மீளப் பெறல் கணக்குகள், பங்குடமை இறுதிக் கணக்கினைத் தயாரித்தல், பங்குடமை இணைப்பு மாற்றங்கள், நன்மதிப்பினைப் பேணுதலும் பங்காளர்களை அனுமதித்தலும், பிற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான நடவடிக்கைகள், பங்குடமையைக் கலைத்தல், கூட்டு முயற்சிகள்.

பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் கணக்கீடு.- பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் தன்மை, உத்தியோக நிரல்படுத்தப்பட்ட கம்பனிகள் மற்றும் பங்குச் சந்தை, பங்குடமை மற்றும் கடன் மூலதனம், பகிரத்தக்க இலாபம், உள்ளக மற்றும் வெளி பயன்பாட்டிற்கான இறுதிக் கணக்குகள், கணக்குக் கூற்றுக்களுக்கான பொருள்கோடல், கணக்கீட்டு விகிதங்கள்.

விசேட கொடுக்கல் வாங்கல்களுக்கான கணக்கீடு.- கம்பனிகள், சங்கங்கள், கையிருப்பு, வாடகைக் கொள்வனவும் கடன் விற்பனைகளும், குத்தகைக்கு விடல், முதலீடுகள், செலாவணி உண்டியல்கள், நீண்டகால ஒப்பந்தங்கள், வேத்துரிமைகள், வெற்றுக் கணக்குகள், வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்.

கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு கணனிகளைப் பயன்படுத்தல்.- கணனிகளின் வகைகள்/வன்பொருள் மற்றும் மென்பொருள், கணனி விநியோக மென்பொருள், இலத்திரனியல் கணக்குத் தாள்கள், கணனிமயப்படுத்திய கணக்கீடு.

***விடய இல.03***- செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல்.- செலவினக் கணக்கீடு, நிதிக் கணக்கீடு, முகாமைத்துவக் கணக்கீடு, ஆகு செலவுக் கணக்கீட்டின் நோக்கம், கணக்கியலை முகாமைத்துவத் துணைக் கருவியாகப் பயன்படுத்தல்.

பொருட் செலவு.- கொள்வனவு நடைமுறைகள், களஞ்சிய முறைகள், பொருள் வழங்கலை மதிப்பீட்டு செய்யும் முறைகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவும் மிகையூதியக் கொடுப்பனவும்.

ஊழியச் செலவு.- நேரம் பதிதல், நேரம் ஒதுக்குதல், சம்பள கொடுப்பனவு முறைகள், மிகையூதியக் கொடுப்பனவுகளும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும், சம்பளங்கள் மற்றும் கூலிகள் என்பவற்றினை புத்தகப் பதிவு வைத்தல்.

பொது விடயங்களுக்கான செலவுகள்.- வகைப்படுத்திய ஒதுக்கங்கள் மற்றும் விநியோகம், அகற்றல் முறைகள், பொது விடய நிருவாகம், வியாபாரம் மற்றும் விநியோகம் பற்றிய பொது விடயச் செலவுகள்.

திரண்ட மற்றும் திரளாத கணக்குகள்.- செலவுக் கட்டுப்பாட்டுக் கணக்குகள், செலவு மற்றும் நிதிக் கணக்குகளின் கணக்கிணக்கம், முழுமைக் கணக்குகள்.

செலவீட்டு முறைகள்.- ஒப்பந்தச் செலவீடு, தொழில் செலவீடு, திணைக்கள செலவீடு, பொருள் செலவீடு, செய்முறைச் செலவீடு, அலகு செலவீடு, சேவைகள் செலவீடு, வெவ்வேறு செலவீட்டு முறைமைகளின் கீழ் தேறப்பெறாத இலாபம்.

எல்லை நிலைச் செலவீடு.- பங்களிப்புக்கள்/விற்பனை, சமவரவு குறிப்புக்கள், எல்லை நிலைச் செலவீட்டின் பிரயோகங்கள், எல்லை நிலைச் செலவீட்டுடன் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகள்,

நியம செலவீடு.- நியம செலவுகள், உண்மையான செலவுகள், அடிப்படை வேறுபாடுகள், கணக்கீட்டு நடைமுறைகள்

வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு.- தொழிற்பாட்டு வரவு செலவுத் திட்டம், பிரதான வரவு செலவுத் திட்டம், நெகிழ்வுத் தன்மைமிக்க வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, தொடர் வரவு செலவுத் திட்டவாக்கம் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடு.

***விடய இல.04*** – அரச நிதி முகாமைத்துவம்.- அரச நிதி தொடர்பான சட்டத் தன்மை

திரண்ட நிதியம், விசேட சட்டச் செலவினம், நானாவித நிதியம், அரச படுகடன், வெளிநாட்டு உதவி, அரசிறைச் செயல்முறைகள்.

பொறுப்புக்கள்.- பாராளுமன்றத்தின், நிதி அமைச்சரின், திறைசேரியின் கணக்காளர் நாயகத்தின், கணக்காய்வாளர் நாயகத்தின், அரச கணக்குகள் குழுவின், அரச தொழில் முயற்சிகள் குழுவின், பிரதான கணக்கீட்டு அலுவலரின், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மற்றும் நாணயச் சபையின் பொறுப்புக்கள்.

வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலம்.- வரவு செலவுத் திட்ட முறைமையும் நடைமுறைகளும், வருமான செலவின மதிப்பீடுகளும்

வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துதல்.- வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒழுங்குக் கட்டமைப்பு, வருமான சேகரிப்பு ஒழுங்கு விதிகள், கொடுப்பனவு செலுத்துவதற்கான கட்டு நிதி, நிதி தொழிற்பாடுகளின் கண்காணிப்பு, பணிகளை கையளித்தல், ஒம்புட்ஸ்மன் நடைமுறைகள், வீரமொங் ஒழுங்கு விதிகள், குறைநிரப்பு மதிப்பீடுகள், வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, கொள்வனவு நடைமுறைகள்.

அரசாங்க கணக்கீட்டு முறைமையும் நடைமுறைகளும்.- அரசாங்க சொத்துக்கள் பற்றிய பொறுப்புக்கள், வருமானம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் பற்றிய கணக்கீடு, செலவினம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கான கணக்கீடு, வெளிநாட்டு உதவிக்கான கணக்கீடு, நட்டத்தை கைவிடல் மற்றும் பதிவழித்தல் பற்றிய கணக்கீடு.

மீளாய்வு.- உடனடி அறிக்கைகள், மாதாந்த கணக்குச் சுருக்கங்கள், நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை மீளாய்வு, வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, நாட்டின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, அரச கணக்குகள் குழுவின் சாராம்சம், அரச தொழில் முயற்சிகள் குழுவின் அறிக்கை.

***விடய இல 05*** – கணக்காய்வும் விசாரணைகளும்.- கணக்காய்வின் தன்மை மற்றும் குறிக்கோள் - கணக்காய்வின் பொறுப்புக்கள்

உள்ளக கணக்காய்வு, புறக்கணக்காய்வு, சட்டவாக்கம் : இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுடன் தொடர்புடைய சட்டமல்லாத – 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், கணக்காய்வு நியமங்கள், கணக்காய்வு அபிப்பிராயங்கள், கணக்காய்வின் எண்ணக்கருக்கள் கணக்காய்வாளரது சுதந்திரமும் பிற ஆள்சார் பண்புகளும், உண்மை மற்றும் நியாயத் தன்மை, பௌதீகத் தன்மை, கணக்காய்வுத் தன்மைகள், கணக்காய்வாளரின் பொறுப்புகள், கணக்காய்வுக்கு உட்பட்டவரின் பொறுப்புகள்.

பாடத் திட்டமும் எல்லைகளும்.- பாடத் திட்டத்தை நிர்ணயித்தல், கருதுகோள் மற்றும் வரையறைகள்

கணக்காய்வுத் தரங்கள் மற்றும் வழிகாட்டல்களின் பொறுப்புக்கள்.- கடமையாற்றுதல் கடிதங்களின், முகாமைத்துவ கடிதங்களின் மற்றும் பிரதிநிதித்துவ கடிதங்களின் பொறுப்புக்கள், அடிப்படை கணக்காய்வு முறைமைகள் மற்றும் மீளாய்விற்கான ஒழுங்கு விதிகள், உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீடுகள்

அளவுத்திட்ட வரைபடங்கள், கேள்விக் கொத்துக்கள்.- கணக்காய்வு திட்டமிடலும் கட்டுப்பாடும்

கணக்காய்வு திட்டமிடலும், நேரம் குறித்தல், இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வு, செயற்பாடுகளுக்கு பொறுப்பு வழங்குதல், கணக்காய்வுக் கட்டுப்பாடு, உள்ளகக் கட்டுப்பாட்டுப் பயன்பாடு உள்ளடங்கலாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளை பதிவு செய்தல், உள்ளக வேலைகளை பதிவு செய்தல், உள்ளகக் கட்டுப்பாடு மதிப்பீட்டிற்கான வினாக் கொத்தக்களையும் படிவங்களையும் தயாரித்தல்.

நிதிக் கணக்காய்வுக்கான பெறுமதிகள், எண்ணக்கருக்கள் மற்றும் பண்புகள்

அது அரசாங்கத் துறையுடன் தொடர்புபடும் விதம், பகுப்பாய்வு ரீதியான கணக்காய்வு

கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் கணக்காய்வு – வரையறுக்கப்பட்ட கம்பனிகள்.- நியதிச்சட்ட ஆவணங்கள், பணிப்பாளர்களின் தத்துவங்களும் கடமைகளும், பங்கிடக் கூடிய இலாபங்கள், கணக்காய்வாளர்களின் நியமனம், ஊதியமும் நீக்கமும், புதிய கணக்காய்வாளர்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், கணக்காய்வாளர்களின் தத்துவங்களும் கடமைகளும்.

பரிசோதனைகளின் தன்மையும் அளவும்.- ஒப்பீட்டுப் பரீட்சை, சுயாதீனமான பரிசோதனை, மாதிரி நுட்பங்கள், ஐந்தொகை சரிபார்த்தல், வருமான செலவின கணக்குகளை சரிபார்த்தல்.

கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்காளர்களின் தொழில்சார் பொறுப்புக்கள்.- தொழில்சார் நடத்தையும் ஒழுக்கவியலும், சட்ட உரிமைகளும் பொறுப்புகளும், கணக்காளர் மற்றும் கணக்காய்வாளர்களின் சட்ட ரீதியான பொறுப்பும் நிகழ்வுகள் தொடர்பான சட்டரீதியான விடய அறிவுடன் தொடர்புடைய சட்டங்களும்.

விசாரணைகள்.- விசாரணையுடன் தொடர்புடைய பாடத் திட்டத்தை திட்டமிடல், பயன்படுத்த வேண்டிய நுட்பங்களும் நடைமுறைகளும், புலனாய்வு நடத்துவதற்கான எண்ணத்தின் உதாரணங்கள், சாத்தியவள ஆய்வுகள், கொள்வனவு, விற்பனை, கடன் வழங்கல், விலையிடல் போன்ற வியாபார நிறுவனங்களின் மதிப்பீடுகள். தகவல் தொகுப்பு அறிக்கைகளுக்கான கணக்காளர்கள், கணக்காய்வாளர்களின் அறிக்கை, அறிக்கையிடல் செயற்பாடுகள், மோசடி புலனாய்வுகள், கருத்திட்ட மதிப்பீடுகள்.

அறிக்கையிடல் தொழிற்பாடுகள்.- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் பலவீனங்கள் பற்றி முகாமைக்கு அறிவித்தல், அரச மற்றும் கூட்டுத்தாபன கணக்காய்விற்கு எழுத்து மூலம் விசேட அறிக்கையிடல் பணிகள், தகவற்தொகுப்பு அறிக்கைகள், விசாரணை அறிக்கைகள்.

***விடய இல.*- 06 பொது விவேகமும் கிரகித்தலும்**

பகுதி ‘அ’

கிரகித்தல் வினாத்தாளில் தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுவர். இன்னுமொரு உரைப்பகுதியும் தரப்படும், அதன் சாராம்சத்தை உரைப்பகுதியிலுள்ள சொற்களில் மூன்றிலொரு பகுதிக்கு சுருக்குமாறு கேட்கப்படும்.

பகுதி ‘ஆ’

விவேகம் -

**குறிப்பு**.- (I) மேற்படி (ஆ) மற்றும் (இ) இலுள்ள "தகைமை பெற்ற பரீட்சை" என்ற சொல்லின் மூலம் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்றினைக் குறிக்கும்.

(II) பரீட்சாத்திகள் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் பதிலளித்தல் வேண்டும்.

(III) தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழியை மாற்றுவதற்கு பரீட்சாத்திகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.-

(அ) பரீட்சாத்தி ஒருவர் தகைமை பெற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஆ) பரீட்சாத்தி ஒருவர் தகைமை பெற்ற பரீட்சையின் பாடங்களை ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருப்பின், அப்பரீட்சையில் அவர் கூடுதலான பாடங்களை எந்த மொழியில் சித்தியடைந்துள்ளாரோ அம்மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(இ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும், மேலதிக பாடத்தை வேறொரு மொழியிலும், சித்தியடைந்துள்ள விசேட பட்டம் ஒன்றினைப் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர் பிரதான பாடங்களை சித்தியடைந்த மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

3-1028

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.